தென்பழனி

தண்டாயுதபாணிக் -
கடவுள் பேரில்

அமுர்தப் பத்து

உ

கடவுள் துணை.

தென்பழனி

தண்டாயுதக் கடவுள் பேரில்

அமுர்தப்பத்து.

நேரிசை வெண்பா.

சீராருந்தென்பழனி தேசிகனைஞ்சண்முகவேள்
பேராரும்பாமாலை பேசுதற்கிங்—கோரும்
நிப்பநிழற்குலவு நித்தனருட்பேராங்
கம்பமதவாரணன்றாள் காப்பு.

ஆசிரிய விருத்தம்

திங்களெனுமதியொளிக்கதிரவொளியா
மூன் திருநகர்மிதியாதபாவி, தீயவஞ்சகரோடு
உரவாகியேவுனது திருவடிமறந்தபாவி, செங்
கையெனும் வற்றாத பொய்கைசூழ் மலைசுற்றி
போற்றியறியாதபாவி, கேவலமறபசுகமங்கை
யற்காளாகி வீணாள்கழித்தபாவி, அங்கமுழு
வெண்ணீறணிந்தசிவஞானிகளை அனுவும
தியாதபாவி, ஐயையோபாவியென்போலு
மொருபாவி யாருமிலகொடியபாவி மங்கைய

லைகுறவரிட சங்கையுடன்மயிலேறி தெரிசன
த்தந்தருளுவாய், திங்களணிசங்கரன் மங்கை
யருள்செல்வமே தென்பழனி மலையமுர்தமே

இகமதிலிரண்டுவினை யென்றசுழியறிய
மல் இரவலரைவைதபாவி, ஈயாதகொடுவஞ்
சகுரவினால் நல்லறிவு யெள்ளளவிலாதபா
வி, செகமெனுங் கொடியவொரு பேய்பிடி
தேயுனது திருவடிமறந்தபாவி, தீயவஞ்ச
மெனும் பொய்களவை நம்பியே திரேகமெ
யென்றபாவி, மகமேரையொப்பிடா பேரின்
பமோனத்தில்மன துவையாதபாவி, மாபாவி
யென்போலு மொருபாவி யகிலமதி லாரும்
லைகொடியபாவி, திசைத்துணையடுத்தசிறுமதி
லையென்குறைதீர தீவிரம்வந்தருளுவாய், தி
ங்களணி சங்கரன் மங்கையருள் செல்வமே
தென்பழனிமலையமுர்தமே

பொய்யுடலைமெய்யென்று நீயருடனுற
வாகி மெய்யறிவிலாதபாவி, பொய்யானமட
மாத ரெனுமந்தபேயுடன் பொழுதினை கழி
த்தபாவி, கையாறநின்கழல் பூசித்துபேரின்ப

காட்சிகாணுதபாவி, கல்லாதபுல்லரிடம் வல்லாண்மைபேசியே காலங்கழித்தபாவி, மெய்யானபேரின்ப நிஷ்டையினை தென்றதன் மேன்மையறியாதபாவி, மெல்லியர்க்காவானபாவியென் போலுமொரு பாவியில்லை கொடியபாவி, தீயனிவ னென்றுனைக விட்டிடாதே யடிமை தீவினையகற்றியாள்வாய், திங்களணி சங்கரன் மங்கையருள் செல்வமே தென்பழனி மலையமுர்தமே. 3

சற்கரைகற்கண்டு தேனுக்குமினிதுசன் மார்க்கமறியாதபாவி, சன்மார்க்க மகிமையை யின்னதென் றறியாமல் சற்சனரை வைதபாவி, துன்மார்க்க குறவிஞல் என்மனம்போன படி தொல்லுலகுழன்றபாவி, இலையாத சம்சார மலையெனும் பேயினுல் இரியநிலை மறந்தபாவி, இணையெனக்காருமில்லை யாதரியென்றவரை இரத்தியே யடித்தபாவி, தொல்லுலகில் மாபாவி யென்போலு மொருபாவி யாருமில்லை கொடியபாவி, திகஷ்ட கோணமொரு நொடியில் வலமாய்வந்த தெய்வமே

யெனையாளுவாய், திங்களணி சங்கரன் மங்கையருள் செல்வமே தென்பழனி மலையமுர்தமே.

ஐயமெனவந்தவர்க் கொருகாசுமீயாமல் அடித்துகொலை செய்தபாவி, அருப்புண்டதென்னைசுண் ணம்புதாவெனறவர்க் கனுவுமூதவாதபாவி, மையாருவிழிமாதர் கண்வலையில்சிக்கியே மைபலிலுழன்றபாவி, மதமென்ற பேய்பிடித்தேயுடலை மெய்யென்று மாதவ மறந்தபாவி, தெய்வகுஞ்சரிவள்ளி பாகனே நின்கழல் இயானமில்லாதபாவி, இபாவி மாபாவி என்போலுமொருபாவி யாருமிலை கொடியபாவி, இவ்வியசா யுச்சிய நிலை மேலான தெய்வமே திருவடி யெனக்கருளுவாய், திங்களணி சங்கரன் மங்கையருள் செல்வமே தென்பழனி மலையமூர்தமே. 5

கைக்குள் வெண்ணெயைவைத்து நெய்யெனக்கறியாத கசடர்களையொத்தபாவி, கன்னெஞ்ச வஞ்சமே குடிகொண்டு சமுசார கவலையிலுழன்றபாவி, மையாரு தெய்வானை பா

கனே நின்கழல் மனதிலுாணுதபாவி, மாத ருல்லாசவைை போகத்தழுந்தியே மதிகெட் டலைந்தபாவி, மதிகெட்டு நின்கழல் துதிவிட்டு உன்னடியர் மகிமையறியாதபாவி, மாபாவி யென்போலு மொருபாவியாருமிலை மண்ணு லகில் கொடியபாவி, திக்கெல்லாம் போற்று மொரு தெய்வமே உனையன்றி திக்குவேறில் லையாள்வாய், திங்களணி சங்கரன் மங்கை யருள்செல்வமே தென்பழனி மலையமூர்தமே.

பெரியோர்கள் போலபொய் வேடந்தரித் திந்த புவிதனிலலைந்தபாவி, பேரின்ப நிஷ் டையினை தென்றதனை யறியாமல் புலவரை யிகழ்ந்தபாவி, வெறிகொண்ட கசடருட னுர வாகியே தினம் வீணாள் கழித்தபாவி, விண் ணுலகறிந்தவர்கள் போலவேபொய்சொல்லி வீண்பொருள் பரித்தபாவி, நெறியெனும் நின்பூசை குறியொன்று மறியாமல் நிலை கெட் டலைந்தபாவி, நீங்காத கன்னெஞ்ச பாவியென் போலுமொரு பாவியிலை கொடிய பாவி, திரிபுரமெரித்தவர்க் கொருமொழி யு ரைத்தமா தெய்வமே எனையாளுவாய், திங்க

ளணி சங்கரன் மங்கையருள் செல்வமே தெ ன்பழனி மலையமுர்தமே.

மட்டிகளிலுங் கொடிய மட்டியுறவாகி மட மாதர்தூதானபாவி, மதிகெட்டு துதிவிட்டு நமனுக்குமிவ்வுடலை மாயமாய் வளர்த்த பாவி, சற்று நின் புகழ்சொலா மூடருடனுறவாகி சற்சனரை வைதபாவி, சண்டாளருக்குமா சண்டாளனுங்கொடிய சண்டாளனானபாவி, எட்டுடனிரண்டுசேர்த் தாலென்ன வறியாமலிகமதி லுழன்றபாவி, என்போலுமொருபாவி யாருமிலைமாபாவி இவ்வுலகில் கொடியபாவி, திட்டெனும் சமுசார கடலிலலையாமலென் தீவினையகற்றியாள்வாய், திங்களணிசங்கரன் மங்கையருள்செல்வமே தென் பழனி மலையமுர்தமே. 8

சரவணோற்பவகுக சரண நின்றனென் றுசாற்றவறியாதபாவி, சற்சனருடன்கூடி யொருதரம் சண்முகா வென்றமுறை யாதபாவி, பரமானசாயுச்சிய பதவிநிலை மேன்மையில் பட்சம்வையாதபாவி, பரமனுக் குறைசொன்

ணதெய்வமே நின்தொண்டர் கூட்டமறியாத பாவி, திரமாகவெண்ணீ ரணிந்தநின் தெரிசனம் செய்துமறியாதபாவி, தீவினைச்செய்த மா பாவியென் போலுமொரு பாவியிலைகொடியபாவி, சிரமதுவளைந்து நின் னடிமையென் றேனெனது சிறுகவலை யாற்றியருள்வாய், திங்களணி சங்கரன் மங்கையருள் செல்வமே தென்பழனி மலையமூர்த்தமே. 9

நின்கோயில் வலமாக வந்து நின் னடிபோற்ற நினைவணுவிலாதபாவி, நிலையிலா மனைமையோர் நிலைகொண் டுனைத்தொழுவர் நேசமில்லாதபாவி, இன்னில மதிக்கவொரு நல்வினை செய்யாமலே என் னுடன் வளர்த்த பாவி, இவ்வுடல்பிரிந்தாவி போகுமிது நிலையல்ல வென் றுனை தொழாதபாவி, யென்வறுமை தீர்த்தாள்வ துன்கடமை யென்றடிமை யினவினேன் பதிகமாக, ஏனோபராமுகம் நானோ உனக்கெதிர் எனையாள்வதொருபாரமோ தென்பழனிதெய்வமே நின்னடிமை யென்றபின் திகைத்தவர்களொருவருணடோ, திங்க

ளணிசங்கரன் மங்கையருள்செல்வமே தென்
பழனி மலையமூர்தமே. 10

வேறு.

சிவசிவா சரவணபவா வாயுசாம்பிராயுச்
சிய திருவாணிதேவிவசிய, ஜெகம்வசிய ஓம்
நமோ நாராயணவசிய ஸ்ரீராமஜெபம்வசிய
வர், எவருமெனதுளம்வசிய மாலைதிரிபுரை
புவனை ஜன்னிதயமாகிவசிய, எனதுமனம்
வசியஜெக ராஜராஜேந்திரரு மெய்போது
மென்னுள்வசிய, அவமிருக்கதுவசிய பூதப்
பசாசுரர் ஹுங்கார அரவுவசிய, அவமிருக்
கதுவசிய ஆகாதசத்துருவு மென்னடிக்கீழ்
வசிய வருள்தந்து யெனையாளுவாய், தவப்
வசிய மேன்மைதரும் வள்ளிமணவாளனே
சுவாமிநா னுனைநம்பினேன், சதுர்மறை
ளடிமுடியு நடுமயமூ நிறைகின்ற சண்முக
சிவாநந்தனே. 1

அமூர்தப்பத்து முற்றிற்று.
